www.StudyGuideIndia.com



Register Number

**Part III**

# வரலாறு / HISTORY

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

குறிப்புரை: இவ்வினாத்தாள் **அ, ஆ, இ, ஈ** என்ற **நான்கு** பகுதிகளைக் கொண்டுள்ளது. வினாக்களுக்கு வரிசைக்கிரமமாக விடையளித்தல் வேண்டும். பகுதி - அ வில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

## பகுதி - அ

குறிப்பு: i) **அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.

ii) அனைத்து வினாவிற்கும் மதிப்பெண் சமம். 45 × 1 = 45

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து உமது விடைத்தாளில் எழுதுக :

1. வாரன்ஹேஸ்டிங்சைத் தொடர்ந்து தலைமை ஆளுநர் ஆனவர்

அ) காரன்வாலிஸ் பிரபு

ஆ) இராபர்ட் கிளைவ்

இ) சர் ஜான் மக்பர்சன்

ஈ) வெல்லெஸ்லி பிரபு.

2. தரோகா என்பவர்

அ) காவல்துறை அதிகாரி

ஆ) நீதித்துறை அதிகாரி

இ) வருவாய்த்துறை அதிகாரி

ஈ) சிறைத்துறை அதிகாரி.

[ Turn over

www.StudyGuideIndia.com

3. கரீம் ஹான் என்பவர்

அ) பிண்டாரித் தலைவர்

ஆ) நேபாள அரசர்

இ) அயோத்தி நவாப்

ஈ) நாக்பூர் அரசர்.

4. இரண்டாவது சீக்கியப் போரின் இறுதிச் சண்டை நடந்த இடம்

அ) ராம் நகர்

ஆ) முல்தான்

இ) சிலியன் வாலா

ஈ) குஜராத்

5. மேலைப் பாளையக்காரர்களில் செல்வாக்குப் பெற்றவர்

அ) புதுக்கோட்டை அரசர்

ஆ) இராமநாதபுரம் அரசர்

இ) பூலித்தேவர்

ஈ) வீரபாண்டியக் கட்டபொம்மன்.

6. புரட்சியின் போது யார் இந்தியாவின் பேரரசர் என அறிவிக்கப் பெற்றார்

அ) தாந்தியா தோபே

ஆ) இராணி லட்சுமிபாய்

இ) நானா சாகிப்

ஈ) இரண்டாம் பகதூர்

www.StudyGuideIndia.com

7. இந்திய ஆயுதச் சட்டத்தை அறிமுகம் செய்த தலைமை ஆளுநர்

அ) லிட்டன் பிரபு

ஆ) கர்சன் பிரபு

இ) வெல்லெஸ்லி பிரபு

ஈ) கானிங் பிரபு.

8. 1900ல் பஞ்சாப் நில உடைமை மாற்றுச் சட்டத்தை நிறைவேற்றியவர்

அ) டப்ரின் பிரபு

ஆ) லேன்ஸ் டவுன் பிரபு

இ) இரண்டாம் எல்ஜின் பிரபு

ஈ) கர்சன் பிரபு.

9. சமரச சுத்த சன்மார்க்க சங்கம் நிறுவியவர்

அ) கேசவ சந்திர சென்

ஆ) வள்ளலார்

இ) ஜோதிபா பூலே

ஈ) இரமாபாய்.

10. இந்திய தேசியக் காங்கிரஸின் முதல் மாநாட்டுத் தலைவர்

அ) சுரேந்திரநாத் பானர்ஜி

ஆ) உ.ச. பானர்ஜி

இ) தாதாபாய் நவ்ரோஜி

ஈ) பிரோசு ஷா மேத்தா.

www.StudyGuideIndia.com

11. வைக்கம் வீரர் என்று அழைக்கப் பெற்ற தலைவர்

அ) கு. காமராஜ்

ஆ) இராஜாஜி

இ) வரதராஜுலு நாயுடு

ஈ) பெரியார் ஈ.வெ.ரா.

12. மருது உடன்பிறப்புக்கள் தூக்கிலிடப்பட்ட ஊர்

அ) சிவகங்கை

ஆ) காளையார் கோவில்

இ) கயத்தாறு

ஈ) திருப்பத்தூர்.

13. ஜாலியன் வாலாபாக் படுகொலை நடைபெற்ற இடம்

அ) டெல்லி

ஆ) மைசூர்

இ) அமிர்தசரஸ்

ஈ) ஒரிஸ்ஸா.

14. சுதேசிக் கப்பல் நிறுவனத்தை ஆரம்பித்தவர்

அ) வ.உ.சி.

ஆ) வ.வே.சு. அய்யர்

இ) சுப்பிரமணிய சிவா

ஈ) பாரதியார்.

www.StudyGuideIndia.com

15. இந்தியாவில் நெருக்கடி நிலையை நடைமுறைப்படுத்திய தலைமை அமைச்சர்

அ) வாஜ்பாயி

ஆ) இந்திரா காந்தி

இ) இராஜீவ் காந்தி

ஈ) மொரார்ஜி தேசாய்.

16. துருக்கியர்கள் கான்ஸ்டான்டி நோபிளைக் கைப்பற்றிய ஆண்டு

அ) 1453

ஆ) 1553

இ) 1653

ஈ) 1753.

17. எலியாஸ் ஹோவே கண்டறிந்த கருவி

அ) தையல் பொறி

ஆ) பருத்தி நூல் நூற்கும் கருவி.

இ) இயந்திரத் தறி

ஈ) மரில்.

18. பிரெஞ்சுப் புரட்சியின் போது ஆட்சியிலிருந்த பிரெஞ்சு அரசர்

அ) பன்னிரெண்டாம் லூயி

ஆ) பதினான்காம் லூயி

இ) பதினெட்டாம் லூயி

ஈ) பதினாறாம் லூயி.

www.StudyGuideIndia.com

19. முதல் உலகப் போர் நடைபெற்ற ஆண்டு

அ) 1917

ஆ) 1914

இ) 1920

ஈ) 1918.

20. நாசிசக் கட்சியின் தலைவர்

அ) முசோலினி

ஆ) உட்ரோ வில்சன்

இ) அடால்ஃப் ஹிட்லர்

ஈ) ஹிண்டன் பர்க்.

II. குறிப்பு : பின்வரும் வாக்கியங்களில் உள்ள கோடிட்ட இடங்களைச் சரியான விடையைக் கொண்டு நிரப்புக :

21. நந்தகுமார் நிகழ்ச்சியின் போது தலைமை ஆளுநர் பொறுப்பு வகித்தவர் .................... .

22. வேலூர் புரட்சியின் போது சென்னை மாநில ஆளுநர் .................... .

23. இராஜா ராம்மோகன் ராய் நிறுவிய அமைப்பு .................... .

24. அரசியின் பேரறிக்கை வெளியான ஆண்டு .................... .

25. .................... என்ற பிரிட்டிஷ் சட்டம் இந்திய வணிகக் குழுவின் முற்றுரிமையை நீக்கியது.

26. பசுமைப் புரட்சிக்கு உறுதியான அடித்தளத்தை .................... அமைத்தார்.

www.StudyGuideIndia.com

27. முஸ்லீம் லீக் நிறுவப்பட்ட ஆண்டு ...................... .

28. இந்திய தேசியப் படையை அமைத்தவர் ...................... .

29. இரஷ்யப் புரட்சிக்கு காரணமான இரஷ்ய ஜார் ...................... .

30. பெனிட்டோ முசோலினி நிறுவிய கட்சி ...................... .

நிரல் 'அ' வின் கீழ் உள்ளவற்றை நிரல் 'ஆ' உடன் பொருத்துக.

| | அ | | ஆ |
|---|---|---|---|
| 31. | கட்டபொம்மன் | — | பிரான்சு |
| 32. | பூலித்தேவர் | — | ஜான்சி |
| 33. | இராணி லட்சுமி பாய் | — | சுவிட்சர்லாந்து |
| 34. | சுவிங்லி | — | நெல்கட்டும் செவல் |
| 35. | கால்வின் | — | பாஞ்சாலங்குறிச்சி. |

36. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டும் சரியானது.

அ) இராமச்சந்திர பாண்டுரங்கன் இராணி லட்சுமிபாயின் தனி உதவியாளர்.

ஆ) இராணி லட்சுமிபாய் ஜான்சியின் அரசி.

இ) நானா சாகிபு திபெத்தில் சரண் அடைந்தார்.

www.StudyGuideIndia.com

37. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டும் சரியானது.

அ) டப்ரின் பிரபு சிறந்த அரச தந்திரி.

ஆ) டப்ரின் பிரபுவின் அரசப் பிரதிநிதிக் காலத்தில் இரண்டாம் பர்மியப் போர் நடைபெற்றது.

இ) லேன்ஸ்டவுன் பிரபுவிற்குப் பின் டப்ரின் பிரபு பதவியேற்றார்.

ஈ) டப்ரின் பிரபுவின் ஆட்சிக் காலத்தில் சென்னை குடியுரிமைச் சட்டம் நிறைவேறியது.

38. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டும் சரியானது.

அ) 1947ல் இந்தியாவை மூன்று நாடுகளாக்கும் திட்டத்தை மௌண்ட்பேட்டன் பிரபு வழங்கினார்.

ஆ) 1949 வரை தலைமை ஆளுநராக மௌண்ட்பேட்டன் பிரபு பதவியில் தொடர்ந்தார்.

இ) மௌண்ட்பேட்டனுக்குப் பிறகு இராஜாஜி தலைமை ஆளுநரானார்.

ஈ) மௌண்ட்பேட்டனுக்குப் பின் இராஜாஜியைத் தொடர்ந்து சர்தார் வல்லபாய் படேல் பதவி வகித்தார்.

39. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டும் சரியானது.

அ) பதினான்காம் லூயியின் கீழ் பிரெஞ்சுப் பொருளாதாரம் பாதிப்புக்கு உள்ளாயிற்று.

ஆ) அரசரின் குழுவில் எண்பது உறுப்பினர்கள் இருந்தனர்.

இ) பிரான்ஸ் அரசரின் அவை புகழ் பெற்றது.

ஈ) பிரெஞ்சு ஆளும் பிரிவினர் புத்திசாலித்தனமும், சுறுசுறுப்பும் மிக்கவர்கள்.

www.StudyGuideIndia.com

40. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டும் சரியானது.

அ) 1914ல் ஐரோப்பா முழுதும் மூன்று பெரும் வலிமையானப் பிரிவுகளாய் பிரிந்திருந்தது.

ஆ) இங்கிலாந்து போரின் துவக்கத்தில் நடுநிலைக் கொள்கையைக் கடைப்பிடித்தது.

இ) 1902ல் ஜப்பானுடன் அமெரிக்கா சேர்ந்தது.

ஈ) எந்த அணியிலும் சேர துருக்கி உடன்படவில்லை.

கீழ்வரும் குறிப்புகளில் எது சரி, எது **தவறு** என்பதனைக் குறிப்பிடுக.

41. மூன்றாம் மைசூர்ப் போரினை வெல்லெஸ்லி பிரபு நிகழ்த்தினார்.

42. ஒழுங்குமுறைச் சட்டத்தை திருத்தும் நடவடிக்கையாக 1784ல் பிட் இந்தியச் சட்டம் வெளியானது.

43. தீவிரவாதிகளின் தலைவர் பாலகங்காதர திலகர்.

44. ஜேம்சுவாட் விசைத் தறியை உருவாக்கினார்.

45. சீனாவில் பொதுவுடமைப் புரட்சி நடைபெற்ற ஆண்டு 1949.

## பகுதி - ஆ

குறிப்பு: i) கீழ்வருவனவற்றுள் ஏதேனும் **பதினைந்து** வினாக்களுக்கு மட்டும் குறிப்பு வரைக.

ii) அனைத்திற்கும் சமமான மதிப்பெண்கள்.

iii) ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** குறிப்புகள் அளித்தல் வேண்டும்.

$15 \times 3 = 45$

46. அயோத்தி பேகங்கள்.

47. ஹேஸ்டிங்சின் நேபாளக் கொள்கை.

48. வாரிசு இழப்புக் கொள்கை.

49. கர்னல் ஜில்லெஸ்பி.

www.StudyGuideIndia.com

50. வெள்ளைப் புரட்சி.

51. மிதவாதிகள்.

52. சுர்னல் நீல் சிலை அகற்றும் போராட்டம்.

53. நிரங்காரி இயக்கம்.

54. நேரு அறிக்கை.

55. நீல நட்சத்திர நடவடிக்கை.

56. இரட்டை ஆட்சி.

57. சுயராஜ்யக் கட்சி.

58. தாஷ்கண்டு பேரறிக்கை.

59. ஆக்லாண்டின் ஆப்கானியக் கொள்கை.

60. மாலுமி ஹென்றி.

61. எட்வர்ட் ஆர்க்ரைட்.

62. சிராஜிவோ நிகழ்ச்சி.

63. நேட்டோ

64. ஹிரோஷிமா, நாகசாகி.

65. ஆக்ஸ்போர்டு சீர்திருத்தவாதிகள்.

www.StudyGuideIndia.com

## பகுதி - இ

குறிப்பு : i) ஏதேனும் **பத்து** வினாக்களுக்கு மட்டும் விடை தருக ( கடைசி வினாவிற்கு கட்டாயமாக விடையளித்தல் வேண்டும் )

ii) எல்லா வினாக்களுக்கும் சம மதிப்பெண்கள்.

iii) ஒவ்வொரு வினாவிற்கும் 100 வார்த்தைகளுக்கு மிகாமல் விடை தருக.

$10 \times 6 = 60$

66. அ) வாரன்ஹேஸ்டிங்ஸ் மீது குற்ற விசாரணைக்கான காரணங்களை விளக்குக.

*அல்லது*

ஆ) காரன்வாலிசின் நீதித்துறைச் சீர்திருத்தங்களை விளக்குக.

67. அ) பெண்டிங் பிரபுவின் சமூகச் சீர்திருத்தங்களை விவரி.

*அல்லது*

ஆ) ஹார்டிஞ்சு பிரபுவின் சீர்திருத்தங்களை எழுதுக.

68. அ) டல்ஹௌசி பிரபுவின் விரிவாக்கக் கொள்கையை ஆராய்க.

*அல்லது*

ஆ) வேலூர் புரட்சியின் காரணங்களை எழுதுக.

www.StudyGuideIndia.com

69. அ) விடுதலைப் போரில் மருது உடன்பிறப்புக்களின் பங்கினை விளக்குக.

அல்லது

ஆ) சமூக சீர்திருத்தத்திற்கு பிரம்மசமாஜம் ஆற்றியப் பங்கினை மதிப்பிடுக.

70. அ) 1857ம் ஆண்டு புரட்சியின் காரணங்களை ஆராய்க.

அல்லது

ஆ) கர்சனின் சீர்திருத்தங்களை ஆய்வு செய்க.

71. அ) விடுதலைப் போரில் ஈ.வெ.ரா வின் பங்கு பற்றி மதிப்பிடுக.

அல்லது

ஆ) விடுதலைப் போரில் இராஜாஜியின் பணி குறித்து விவரி.

72. அ) 1940ம் ஆண்டு தனிநபர் அறப்போரினை விளக்குக.

அல்லது

ஆ) முதல், இரண்டு தேசிய இயக்க நிலைகளை சுருக்கமாக எழுதுக.

73. அ) அலிகார் இயக்கம் பற்றி எழுதுக.

அல்லது

ஆ) 1773 முதல் 1853 வரை அரசியல் சட்ட வளர்ச்சியை வரைக.

www.StudyGuideIndia.com

74\. அ) 1984ம் ஆண்டு போபால் நச்சு வாயுக் கசிவு விபத்து குறித்து விளக்குக.

அல்லது

ஆ) 1964 முதல் 1966 வரை இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைகளை விளக்குக.

75\. அ) சமய சீர்திருத்தத்தின் விளைவுகள் யாவை ?

அல்லது

ஆ) முதல் உலகப் போரின் விளைவுகள் யாவை ?

76\. அ) இங்கிலாந்தில் ஏன் தொழிற்புரட்சி ஏற்பட்டதென விளக்குக.

அல்லது

ஆ) பிரெஞ்சுப் புரட்சிக்கான காரணங்கள் யாவை ?

77\. அ) 'உலகமயமாக்கல்' எனும் சொற்கூற்றை விளக்குக.

அல்லது

ஆ) பிரெஞ்சுப் புரட்சியின் விளைவுகளை எழுதுக.

## பகுதி - ஈ

குறிப்பு : i) ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக. கடைசி வினாவிற்குக் கட்டாயமாக விடை தருதல் வேண்டும். ( வினா எண். 84 )

ii) அனைத்து வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

iii) ஒவ்வொரு வினாவிற்கும் 200 வார்த்தைகளுக்கு மிகாமல் விடை தருக.

5 × 10 = 50

78\. அ) வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டத்தை விளக்குக.

அல்லது

ஆ) வாரன்ஹேஸ்டிங்ஸ் தொடங்கி வைத்தப் பணிகளை காரன்வாலிஸ் முடித்து வைத்தார் என்று கூறுவது சரியா என்பதை ஆராய்க.

www.StudyGuideIndia.com

79. அ) இராமலிங்க வள்ளலார் குறித்துக் கட்டுரை வரைக.

அல்லது

ஆ) விடுதலைப் போரில் அண்ணல் காந்தியின் பங்கினை விளக்குக.

80. அ) 1947 முதல் 1964 வரை இந்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகளை விளக்குக.

அல்லது

ஆ) 1919 வரை விடுதலைப் போரில் தமிழ்நாட்டின் பங்களிப்பு பற்றி விவரி.

81. அ) ஐரோப்பிய மறுமலர்ச்சி இயக்கம் குறித்து கட்டுரை வரைக.

அல்லது

ஆ) புவியியல் கண்டுபிடிப்புகளுக்கானக் கூறுகளை விளக்குக.

82. அ) முதல் உலகப் போருக்கானக் காரணங்களை ஆராய்க.

அல்லது

ஆ) ரஷ்யப் புரட்சிக்கான காரணங்களைப் பற்றி விரிவான விளக்கம் தருக.

83. அ) ஜெர்மனியில் தோன்றிய நாசிசக் கட்சியின் கொள்கைகளையும், பணிகளையும் ஆராய்க.

அல்லது

ஆ) உலக அமைதியைக் காப்பதில் ஐ.நா.அவையின் பங்கினை விவாதிக்க.

www.StudyGuideIndia.com

84. அ) இந்திய வரைபடத்தில் கீழ்கண்ட ஐந்து இடங்களைக் காட்டுக.

i) சூரத்

ii) சென்னை

iii) வங்காளம்

iv) ஒரிஸ்ஸா

v) மைசூர்

வெல்லெஸ்லியின் கீழ் ஆங்கிலேயர் இருப்பிடங்களைச் சுட்டிக் காட்டுக.

அல்லது

ஆ) 1900 முதல் 1950 வரை நடைபெற்ற விடுதலைப் போர் நிகழ்ச்சிகள் ஐந்தினை காலக்கோடு காட்டி வரைக.

அல்லது

இ) இரண்டாம் உலகப் போரின் போது நிகழ்ந்த ஐந்து முதன்மை நிகழ்ச்சிகளைக் காலக்கோடு காட்டி வரைக.

www.StudyGuideIndia.com